# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**11,680 — 1959 පෙබරවාරි 27 වැනි සිකුරාද — 27.2.1959**

11,680 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு மாசி மாதம் 27 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II) — விளம்பரங்கள்

## பரீட்சையும் பரீட்சைப் பெறுபேறுகளும்

### சௌக்கியப் பகுதி

**பொதுச்சௌக்கிய பயில்வோர் பயிற்சி வகுப்புக்கு அனுமதிப்பதற்காகப் பரீட்சார்த்திகளைத் தேர்ந்தெடுத்தல்**

பொதுச் சௌக்கிய பயில்வோருக்கான பயிற்சி வகுப்புக்கு அனுமதிப்பதற்காக 1959 ம் ஆண்டு மே மாதம் 2 ம் திகதியில் நடைபெறவிருக்கும் ஒரு போட்டிப்பரீட்சைக்கு இலங்கைய (ஆண்கள்) ரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்கும் முறைகள், பரீட்சையில் அனுமதிபெறுவதற்கு வேண்டிய தகைமை நிபந்தனைகள், பயிற்சி பெறுங்காலத்திலும் சேவைக்காலத்திலும் அனுசரிக்கவேண்டிய நிபந்தனைகள் ஆகியவற்றின் முழு விபரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

2. **தேவையான தகைமைகள்** :—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் கீழ்க்காணும் விஷயங்களில் திருப்தியேற்படும்படியான ஆதாரங்களைக் காட்டுதல் வேண்டும் :—

(அ) 1959 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1 ம் திகதியில் 19 வயதுக்கு மேற்பட்டவராயும் 24 வயதுக்கு உட்பட்டவராயுமிருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப்பகுதியின் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்கு மேலான பரீட்சையில் சித்தியெய்தி இருக்கவேண்டும்.

3. **விண்ணப்பிக்கும் முறை** :—(அ) விண்ணப்பபாரங்கள் வழங்கப்படுவதில்லை. இதன் கீழ் காணப்படும் விண்ணப்ப மாதிரிப்பத்திரத்தைப் போல எழுதி, நிரப்பி அதனைப் பதிவுத்தபாலில், "சௌக்கிய சேவை அதிபதி, தபால் பெட்டி எண் 500, கொழும்பு 1" என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபால் மேல் உறையின் இடது பக்க மேல் மூலையில் "பொதுச் சௌக்கிய பயில்வோரைத் தேர்ந்தெடுப்பதற்கான விண்ணப்பம்" என்று எழுதி அனுப்பவேண்டும்.

(ஆ) இதன் கீழ் கையொப்பமிட்டிருப்பவரின் பெயருக்கோ அன்றி இப்பகுதியில் சேவை செய்யும் எந்த உத்தியோகத்தருக்கோ விண்ணப்பத்தை அனுப்பவுங்கூடாது. நேரடியாகக் கொடுக்கவுங் கூடாது.

(இ) ரூபா 5 (ஐந்து) பெறுமதியான தபால் முத்திரையை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மீது விண்ணப்பதாரர் கையொப்பமிடவேண்டும்.

(ஈ) விண்ணப்பம் செய்பவர் ஏற்கனவே ஒரு உத்தியோகத்தில் இருந்தால், அவர் தன்து முதலாளியிடம், "விண்ணப்பதாரர் இப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், இப்பயிற்சி தொடங்கும்போது விண்ணப்பதாரரைத் தான் விடுவதற்குச் சம்மதிப்பதாக," ஒரு கடிதம் வாங்கி விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும்.

(உ) விண்ணப்பத்துடன் பின்வருவனவற்றையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும் :—

(i) விண்ணப்பதாரரின் வயதை எடுத்துக்காட்டும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (ஞானஸ்நானப் பத்திரம், பிறப்புச் சத்தியப்பத்திரம், சாதகம், பாடசாலைத் தேவைகட்கு உபயோகித்த பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ஆகியன ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

(ii) ஆகக்கூடிய கல்வித்தகைமைத்தராதரப் பத்திரங்களின் பிரதிகள்.

(iii) விண்ணப்பதாரரை நன்கு தெரிந்தவர்களும் பொறுப்புள்ளவர்களுமான இருவரிடமிருந்து அண்மையில் பெறப்பட்ட இரு நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள். விண்ணப்பதாரர் கல்விகற்ற பாடசாலை அதிபரிடம் இருந்து பெறப்பட்ட நற்சாட்சிப்பத்திரம் (பிரதி) இதில் ஒன்றாக இருக்கவேண்டும்.

பத்திரங்களின் பிரதிகளுக்குப் பதிலாக மூலப்பிரதிகள் அனுப்பப்பட்டால், அவற்றைத் திருப்பி அனுப்புவதற்கு யாரும்பொறுப்பாளிகளல்ல.

4. **பரீட்சைத்திட்டம்** :—கீழே காணப்படும் இப்பரீட்சைக்கான பாடங்கள், சிரேட்ட பாடசாலைத்தராதர நிலையிலிருக்கும் :—

(அ) **போட்டிப்பரீட்சை** :—இப்பரீட்சை இரண்டு பாகங்களாக நடைபெறும். முதலில் நடைபெறும் எழுத்துப்பரீட்சையின் முடிவைக் கொண்டு, போட்டிமுறையில், பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். கொழும்பில் நடைபெறும் நேர்முகப்பரீட்சையின் திகதி பரீட்சார்த்திகளுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படும்: எழுத்துப்பரீட்சையின் ஒவ்வொரு பிரிவிலும் ஆகக்குறைந்தது 40 வீதமான புள்ளிகள் பெற்ற பரீட்சார்த்திகளே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். பரீட்சார்த்தி எம்மொழியில் (1) பாஷையும் வியாசமும் என்ற பாடத்தை எடுத்தாரோ அம்மொழியிலேயே நேர்முகப்பரீட்சையும் நடைபெறும்.

| **பரீட்சைப்பாடங்கள் பின்வருமாறு :—** | புள்ளிகள் |
|---|---|
| (1) பாஷையும் வியாசமும் (தமிழ் அல்லது சிங்களம் அல்லது ஆங்கிலம்) 1½ மணித்தியாலங்கள் .. | 150 |
| (2) பொது அறிவும் இலங்கைபற்றிய அறிவும் (தமிழ் அல்லது சிங்களம் அல்லது ஆங்கிலம்) 1 மணித்தியாலம் .. | 100 |
| (3) எண் கணிதம், நெடுங்கூட்டல் உட்பட (தமிழ் அல்லது சிங்களம் அல்லது ஆங்கிலம்) 1 மணித்தியாலம் .. | 100 |
| (4) பொது விவேகம் (தமிழ் அல்லது சிங்களம் அல்லது ஆங்கிலம்) 45 நிமிடங்கள் .. | 100 |
| (5) சாதாரண விஷயத்தைப்பற்றிய ஒரு ஆங்கிலக் கட்டுரை :— முதலாவது பாடமான பாஷையும் வியாசத்தையும் ஆங்கிலத்தில் எடுக்காதவர்கள் அனைவரும் பொதுத்தராதரக்கல்வி (சாதாரண) நிலையில் நடைபெறுவதும் தகைமைக்கான பரீட்சையாக மட்டும் இருப்பதுமான இப்பாடத்தை (ஆங்கிலக்கட்டுரை) எடுக்கவேண்டும். இப்பாடத்தில் ஆகக்குறைந்தது 40 வீதமான புள்ளிகள் எடுக்கும் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். எனினும் திறமை காரணமாக நியமனம் பெறும் பரீட்சார்த்திகளின் புள்ளிகள் ஆலோசனைக்கெடுத்துக்கொள்ளப்படமாட்டா. 45 நிமிடங்கள் .. | 100 |

**குறிப்பு**:— இரண்டாம் பந்தியிற் கூறப்பட்ட பிரகாரம் பரீட்சார்த்தி தன்து கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சையை எந்த மொழியில் எடுத்து சித்தியெய்தினாரோ அதே மொழியில் (தமிழ் அல்லது சிங்களம் அல்லது ஆங்கிலம்) இப்பரீட்சையையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறார். எனினும்,

(அ) வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு பாடங்களை எடுத்து கல்வித்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்தியுள்ள பரீட்சார்த்தியொருவர் இப்பரீட்சையில், அந்தந்த மொழிகளில் அந்தந்தப் பாடங்களையும், ஏனைய பாடங்களை முதலாவது எடுக்கும் பாட (பாஷையும் வியாசமும்) மொழியிலும் எடுக்க வேண்டும்.

(ஆ) கல்வித்தராதரப்பத்திரப் பரீட்சையைத் தமிழ் அல்லது ஆங்கில மொழியில் எடுத்துச் சித்தியெய்திய அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழியில் பயிற்றப்பட்ட பரீட்சார்த்தியொருவர் விரும்பினால் சிங்கள மொழியில் இப்பரீட்சையை எடுக்கலாம்.

நேர்முகப்பரீட்சை 100 புள்ளிகள்.

முதலாவது பாடமான பாஷையும் வியாசத்தையும் எம்மொழியில் எடுக்கிருரோ அம்மொழியிலேயே நேர்முகப்பரீட்சையின்போதும் பரீட்சார்த்தி பரீட்சிக்கப்படுவார்.

(ஆ) பரீட்சை மண்டபத்துள், மேற்பார்வையாளர் திருப்தி கொள்ளும் படியாக ஒவ்வொரு பாடவேளையிலும் பரீட்சார்த்தி தனது அடையாளச் சீட்டை மேற்பார்வையாளரிடம் காண்பிக்கவேண்டும். இதற்கு ஆதாரமாகக் கீழ்க்காணப்படுவனவற்றில் ஒன்றைப் பரீட்சார்த்தி வைத்திருக்க வேண்டும் :—

(i) தபாற்கந்தோர் தலைமை அதிபதி (போஸ்ட் மாஸ்ட்டர் ஜெனரல்) வழங்கிய அடையாளச் சீட்டு.

(ii) பரீட்சை நடைபெறும் திகதிக்கு மூன்று வருடங்களுக்குள்ளாக எடுக்கப்பட்ட வெளிநாட்டுப் பிரயாணச் சாதனம் (பாஸ்போட்)

(iii) அரசாங்கப் பகுதியின் அதிகாரத்தோடு பரீட்சை நடைபெறும் திகதிக்கு மூன்று வருடங்களுக்குள்ளாகக் கொடுக்கப்பட்டதும், பரீட்சார்த்தியின் புகைப்படத்தைக் கொண்டதுமான பத்திரம், அனுமதிச்சீட்டு (லைசென்ஸ்) அல்லது வேறு சான்றுப்பத்திரம்.

பரீட்சைப் பிரவேசச்சீட்டுடன் மேற்கண்ட அடையாளச் சீட்டுக்களிலொன்றை எடுத்துச் செல்லாத பரீட்சார்த்தி இப்பரீட்சையை எடுக்க அனுமதிக்கப்படமாட்டார்.

(இ) நேர் முகப்பரீட்சை இதற்கென்று நியமிக்கப்பட்ட ஒரு சபையால் நடாத்தப்படும். எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பிரிவிலும் ஆகக்குறைந்தது 40 வீதமான புள்ளிகள் பெற்ற பரீட்சார்த்திகளுக்கு வைக்கும் நேர்முகப் பரீட்சையின் திகதியும் இடமும் அவர்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்குத்தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு இப்பகுதியால் எவ்வித பிரயாணச் செலவுகளும் கொடுக்கப்படமாட்டாது. விண்ணப்பத்தோடு அனுப்பிவைத்த பத்திரங்களின் மூலப்பிரதிகளை பரீட்சார்த்தி நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கவேண்டும்.

(ஈ) இப்பரீட்சை, பரீட்சைகள் பகுதியின் மேற்பார்வையின் கீழ் கொழும்பில் ஓர் இடத்தில் நடைபெறும். இதன் விபரங்கள் பரீட்சார்த்திக்குத் தெரிவிக்கப்படும். விண்ணப்பக்கட்டண (ரூபா 5) த்துடன் பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்கட்டணமாக ரூபா 5 ம் (தபால் முத்திரை மூலமாக) செலுத்த வேண்டும்.

(உ) பயிற்சி வகுப்பில் அனுமதிப்பதற்குப் பரீட்சாத்திகளைத் தேர்ந்தெடுப்பது போட்டிப் பரீட்சையில் பரீட்சாத்திகளின் திறமை காரணமாக ஏற்படும் முடிவையும் பயிற்சி வகுப்பிலுள்ள காலித்தானங்களையும் பொறுத்துள்ளது. பயிற்சி வகுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகளின்பெயர்கள்காலக்கிரமத்தில் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும்.

5. **வைத்தியப் பரீட்சை :** சித்தியெய்திய பரீட்சாத்திகள் இலங்கையின் எப்பாகத்திலேனும் சேவை செய்வதற்கு உடற்றகுதி வாய்ந்தவர்களெனக் காட்டுவதற்கு ஒரு வைத்தியப் பரீட்சைக்குள்ளாக வேண்டும்.

6. **களுத்துறையிலுள்ள பயிற்சி வகுப்பின் பயிற்சித் திட்டம் :—**

(அ) பயிற்சி வகுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சாத்திகள் சௌக்கிய அரச சங்கத்தின் பரீட்சைச் சபைக்கு ரூபா 70 செலுத்துவதோடு கீழ்க்காணும் உபகரணங்களையும் வைத்திருக்க வேண்டும்:

(i) ஒரு துவிச்சக்கரவண்டி.

(ii) வரையும் உபகரணங்கள்.

(iii) அளவை நாடாவும் (ரேப்) அளவு கோலும்.

(iv) ஏனைய உபகரணங்கள். இவை, பயிற்சி வகுப்பில் அனுமதிக்குமுன், பயிற்சி வகுப்புக்குப் பரீட்சார்த்திகளை அழைக்கும்போது தெரிவிக்கப்படும்.

பிணைப்பணமாக ரூபா 70 செலுத்திய பின்னர் தேக நலக்குறைவு காரணமாக பயிற்சி வகுப்பில் சேரமுடியாத பரீட்சாத்தியொருவர், தாரதரம் பெற்றவரும் பதிவு செய்துகொண்டவருமான ஒரு வைத்தியரிடமிருந்து ஒரு வைத்தியப் பத்திரமொன்றைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் இவர் செலுத்திய பிணைப்பணத்தின் 4/5 பங்குப் பணத்தைப் திரும்பவும் பெறலாம். வேறு எவ்வித சந்தர்ப்பத்திலும் இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

(ஆ) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் :—

(i) பயிற்சி வகுப்பின் நியமனத்தை ஏற்றுக்கொண்ட பின்னர் பயிற்சியை முற்றுக முடிக்குமுன்னர் சொந்த விருப்பத்திற்கிணங்கத் தன் நியமனத்திலிருந்து இராஜினாமா செய்தால் அல்லது முழுப்பயிற்சியையும் பெறத் தவறினால் பயிற்சி பெறுங்காலத்தில் பெற்ற முழு வேதனத்தையும் (அலவன்ஸ்) சௌக்கியப் பகுதிக்குத் திருப்பிக் கொடுப்பேனென்று, அதற்கெனவுள்ள ஒரு உடன்படிக்கையில் கையொப்பமிடவேண்டும்.

(ii) திருப்திகரமாக பயிற்சியை முடித்த மூன்று மாதங்களுக்குள் அவருக்கு ஒரு நியமனம் கொடுக்கப்பட்டால் அதை அவர் ஏற்பதாகவும் அவர் பதவியேற்று 36 மாதங்களுக்குள் பதவியிலிருந்து விலகவோ அல்லது விலகும்படி கேட்கவோ மாட்டேனென்று அதற்கெனவுள்ள ரூபா 500 பெறுமதியான ஒரு நிபந்தனைக்கும் உட்பட வேண்டும்.

(இ) களுத்துறையிலுள்ள பயிற்சி வகுப்பில் ஏறத்தாழ ஒன்பது மாதங்களுக்குப் பயிற்சியளிக்கப்படும். பயிற்சியின் அன்றாட நிகழ்ச்சிகள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| காலை 7.30 மணி தொடக்கம் 10.30 வரை | பயிற்சியளிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள பொதுச் சௌக்கிய பரிசோதகரின் மேற்பார்வையில் பயிற்சியாளர்கள் தினசரி வேலை செய்தல். |
| மு. ப. 11 மணிமுதல் 12 மணிவரை | விரிவுரை |
| பி. ப. 2 மணிமுதல் 4.30 மணிவரை | (அ) பயிற்சியாளர்கள் அரை வாசிப் பேருக்கு செய்ல்முறைப் போதனை. |
| | (ஆ) எஞ்சிய அரைவாசிப் பேருக்கு சாதனை வேலைகள். |

சனிக்கிழமை காலைகளில் கூட்டங்கள், ஆராய்வுகள் முதலியவற்றுடன் நீதிமன்ற விதிகளைப்பற்றிய பயிற்சியும் அளிக்கப்படும்.

(ஈ) பயிற்சி பெறுங் காலத்தில் பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் மூன்று வகையான புத்தகங்களை வைத்திருக்க வேண்டும். விரிவுரைக்கு ஒன்றும் சாதனை வேலைகளுக்கு ஒன்றும் வெளியிட செயல்முறை வேலைக்கு ஒன்றுமாக மூன்று பிரிவுகளாகப் புத்தகங்களை வைத்துப் பாவிக்க வேண்டும். பரிசோதனையின்போது இப்புத்தகங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(உ) பயிற்சிக் காலத்தில் மாதாந்த பரீட்சைகள் நடைபெறும். இப்பரீட்சைகளின் முடிவுகள் கடைசிப் பரீட்சையில் தீர்மானித்துக் கொடுத்துக்கொள்ளப்படும்.

(ஊ) **சௌக்கியக்கூறு விடுதி :** சகல உபகரணங்களைக் கொண்ட விடுதியில், பயிற்சிக் காலத்தின்போது பரீட்சாத்திகளுக்கு இலவச சாப்பாட்டு, விடுதி வசதிகள் அளிக்கப்படும். அத்துடன் பயிற்சிக் காலத்தின்போது பரீட்சாத்திகளுக்கு மாதாந்தம் ரூபா 50 வேதனமாக அளிக்கப்படும்.

(எ) **பயிற்சி நீக்கத்துக்குரிய காரணங்கள் :** பயிற்சி பெறும் பரீட்சார்த்தியொருவர் அவரது வரவு இடாப்பு படிப்பு, பழக்க வழக்கங்கள் முதலியவற்றில் சௌக்கிய சேவை அதிபதியின் திருப்தியைப் பெறத்தவறும் பட்சத்து பயிற்சிக் காலத்தில் எச்சமயத்திலும் பயிற்சி வகுப்பிலிருந்து விலக்கப்படுவதற்கு அருகதையுடையவராவர். அங்ஙனம் பயிற்சியிலிருந்து விலக்கப்பட்டவருக்கு, அவர் கட்டிய பணமெதுவும் திருப்பிக்கொடுக்கப்படாததுடன் வேறெந்தப் பயிற்சி வகுப்புக்கும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அருகதையற்றவராவர். பயிற்சி வகுப்பிலிருந்து தானாக விலகும் ஒருவருக்கு அவர் கட்டிய பணமெதுவும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. அத்துடன் பயிற்சி வகுப்பிலிருக்கும்போது அவர் சௌக்கியப் பகுதியிலிருந்து பெற்ற வேதனம் முழுவதையும் இப்பகுதிக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

(ஏ) **தகைமைப் பரீட்சை :** பயிற்சிக்கால இறுதியில் லண்டன், சௌக்கிய அரசாங்கத்தின் தலப்பரீட்சைச் சபையால் நடாத்தப்படும் தகைமைப் பரீட்சை, கொள்கைமுறை, சாதனைவேலை, நேர்முகப் பரீட்சை ஆகிய பிரிவுகளைக் கொண்டதாயிருக்கும்.

(ஐ) **நியமனம் :** லண்டன், சௌக்கிய அரச சங்கத்தின் பரீட்சையாளர்களைத் திருப்தி செய்யும் (பரீட்சையில் சித்தியெய்தும்) பரீட்சார்த்திகள், காலித்தனங்கள் ஏற்படும்போது, சௌக்கியப் பகுதியில் பொதுச் சௌக்கிய பரிசோதகர்களாக நியமனம் பெறுவதற்கு அருகதையுடையவராவர்.

7. **சம்பளம், வேதனம் (அலவன்ஸ்), சேவை நிபந்தனைகள் :** இரண்டாம் வகுப்பு பொதுச் சௌக்கிய பரிசோதகர்களின் சேவை அடிப்படையில் சகல நியமனங்களும் இருக்கும்.

**சம்பளம் :** பொதுச் சௌக்கிய பரிசோதகர்கள் : வகுப்பு II வருடத்துக்கு ரூபா 1,140 ஆகத் தொடங்கி 13 வருடங்களுக்கு ரூபா 120 வீதம் உயர்வு—ரூபா 2,700 வரை. இச்சம்பள விகிதத்தில் வருடச் சம்பளம் ரூபா 1,980 ஆவதற்குமுன் திறமைத்தடைப் பரீட்சையுண்டு.

பொதுச் சௌக்கிய பரிசோதகர்கள் வகுப்பு I:— வருடத்துக்கு ரூபா 2,820 ஆகத்தொடங்கி—ரூபா 120 வீதம் 9 வருடங்களுக்கும் ரூபா 180 வீதம் ஒரு வருடத்துக்கும் உயர்வு—ரூபா 4,080 வரை. வருடச்சம்பளம் ரூபா 3,420 ஆவதற்கு முன் திறமைத்தடைப்பரீட்சையுண்டு.

**பொதுச் சௌக்கிய பரிசோதகர்கள் விசேட வகுப்பு** :—வருடத்துக்கு ரூபா 4,260 ஆகத்தொடங்கி—ரூபா 180 வீதம் ஆறு வருடங்களுக்கும் ரூபா 240 வீதம் ஒரு வருடத்துக்கும் உயர்வு—ரூபா 5,580 வரை வருட்சம்பளம் ரூபா 4,980 ஆவதற்குமுன் திறமைத்தடைப்பரீட்சையுண்டு.

8. **வேதனம் (அலவன்ஸ்)** :—வாழ்க்கைப்படி, விசேட வாழ்க்கைப் படி, வாடகைப்படி ஆகியன அரசாங்க விதிகள் பிரகாரம் வழங்கப்படும்.

பிரயாணப்படி, வீட்டுப்படி, காரியாலயப்படி, உத்தியோகஉடைகள் தொப்பிகள், மழை அங்கிகள் ஆகியன பகுதி விதிகள் பிரகாரம் வழங்கப்படும்.

9. (i) இந்நியமனம், அரசாங்க சேவை அதிகாரசபைக் கட்டளைகள், நிதிவிதிகள், நடவடிக்கை விதிமுறைச் சட்ட விதிகள், சௌக்கிய சேவைப் பகுதி விதிகள், உத்தரவுகள், மற்றும், அரசாங்கத்தால் காலாகாலத்தில் பிறப்பிக்கப்படும் எவ்விதமான உத்தரவுகள், சட்ட விதிமுறைகள் முதலியனவற்றிற்கு அடங்கியதாக இருக்கும். ஒவ்வொரு உத்தியோகத்தரும் மூன்று வருடங்களுக்கு பரீட்சார்த்த நிலையிலிருக்கவேண்டும்.

(ii) இப்பரீட்சை முழுவதையும் சிங்கள மொழிமூலம் எடுக்காதவரும் இப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவருமான பரீட்சார்த்திகள் தமது பரீட்சார்த்தமான காலத்தில் சிங்களங் கற்றல் வேண்டும். இப்பரீட்சார்த்திகள் சிங்களத்தில் ஒரு தகுதிகாண் பரீட்சையிற் சித்தியெய்துவதைப்பொறுத்தே பரீட்சார்த்தமான காலம் முடியும்போது பதவியில், உறுதிபெறுவர்.

(iii) பரீட்சார்த்தமான காலத்தில், விதிக்கப்பட்ட திறமைத்தரத்தைச் சிங்களத்தில் எய்தத்தவறுவோர் வேலையினின்று நீக்கப்படலாம் ; ஆனால் பொருத்தமான அதிகாரி, அரசாங்க பாஷையைக் கற்பதற்கு உண்மையாகவே முயற்சி செய்யப்பட்டுள்ளதெனத் திருப்திப்படுவாரானால், அவ்வாறு நீக்கப்படுவது தள்ளிவைக்கப்படலாம். பரீட்சார்த்த நிலையிலுள்ள உத்தியோகத்தர் உரியதேதியின் பின்னர் நியாயமான ஒரு காலத்துள் குறித்த பரீட்சையிற் சித்தியெய்துவாராயின், பொருத்தமான அதிகாரி தமது உசிதாசாரப்படி அவர் சிரேட்டத்துவக் கிரமத்தில் இழந்த நிலையை மீட்டுக்கொடுக்கலாம்.

(iv) அரசாங்க சேவையில் நியமனம் பெறும் சகல " புதிதாக சேர்ந்த உத்தியோகத்தர்கள் ", இதுகாலவரை உண்டாக்கப்பட். அல்லது இனிமேல் உண்டாக்கப்படும் அரசாங்க மொழிக்கொள்கையின் கட்டளைகள், விதிகள், குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்டவிதிகளை நடைமுறையிற் கையாண்டு, அவைகளுக்கு அமைந்து நடக்கவேண்டும்.

10. **சௌக்கிய அரச சங்கத்தால் அளிக்கப்படும் தராதரப்பத்திரம்** :—சௌக்கியப்பகுதியில் திருப்திகரமான வகையில் ஒரு வருட சேவை செய்து முடித்த பொதுச்சௌக்கிய பரிசோதகர்கள், லண்டன், சௌக்கிய அரச சங்கத்தால் அளிக்கப்படும் தராதரப்பத்திரத்தைப் பெறுவதற்குச் சிபார்சு செய்யப்படுவர்.

11. முந்திய தகைமைப் பரீட்சைகளில் சித்தியெய்தாத பரீட்சார்த்திகள், பயிற்சிக்கோ அன்றி மறு பரீட்சைக்கோ, சௌக்கிய சேவை அதிபதியின் அனுமதியோடு சௌக்கிய அரச சங்கத்தின் தலப்பரீட்சைச் சபையின் வேண்டுகோளுக்கிணங்காத பட்சத்து, அனுமதிக்கப்படமாட்டார்கள்.

12. மேற்கூறப்பட்டுள்ள சகல ஆதாரங்களையும் கொண்டுவராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

13. நிராகரிக்கப்படும் விண்ணப்பங்களின் முத்திரைப்பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. பரீட்சார்த்தியொருவர் சுகவீனங் காரணமாகப் பரீட்சைக்குத்தோன்ற முடியாத பட்சத்து, ஒரு பதிவு செய்துள்ள வைத்தியரிடம் ஒரு வைத்தியப்பத்திரம் வாங்கிச் சமர்ப்பித்தால் முத்திரைப்பெறுமதியின் 3/5 பங்குப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

14. விண்ணப்பங்களைக் கீழ்க்காணும் விதத்தில் எழுதி, நிரப்பி 1959 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ந் திகதிக்குப்பிந்தாமல் சௌக்கிய சேவை அதிபதிக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

டபிள்யூ. எ. கருணரத்ன,
பிரதி சௌக்கிய அதிபதி,
(பொதுச் சௌக்கிய சேவை),
சௌக்கிய சேவை அதிபதிக்காக.

கொழும்பு,
1959 ம் ஆண்டு பெப்ரவரி மீ 24 ந் உ.

## விண்ணப்பப் பத்திரம்

### பொதுச் சௌக்கிய பயில்வோர் பரீட்சை

1. பெயர் (தலைப்பெயருடன்) : ————.

தன் பெயர் : ————.

வேறு பெயர்கள் : ————.

2. விலாசம் : ————.

3. வயதும் பிறந்த திகதியும் : ————.
(பிறப்புப் பத்திரத்தின் பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்)

4. சாதியும் சமயமும் : ————.

5. மணமானவரா ? மணமாகாதவரா ? ————.

6. எந்நாட்டைச் சேர்ந்தவர் ? ————.

(அ) பாரம்பரீய இலங்கையரா ? அல்லது

(ஆ) பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரஜையா ? ————.
பாரம்பரீய இலங்கையரானால் கீழ்க்காணும் விபரங்களைத் தருக : ————.

பின்வருவோர் பிறந்த இடங்கள் :

(அ) விண்ணப்பதாரர் : ————.

(ஆ) விண்ணப்பதாரரின் தந்தை : ————.

(இ) விண்ணப்பதாரரின் பாட்டன் : ————.

(ஈ) விண்ணப்பதாரரின் பூட்டன் : ————.

விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்திருந்தால், (அ) வோடு (ஆ) அல்லது (இ) யும் (ஈ) யும் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் இலங்கையில் பிறக்காதிருந்தால் (அ) வோடு (ஆ) வும் (இ) யும் அல்லது (இ) யும் (ஈ) யும் நிரப்பப்படல் வேண்டும்.

7. சித்தியெய்திய கடைசிப் பரீட்சையும் கல்விகற்ற இடங்களும் : ————.
(பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

8. பெற்றோரின் விலாசமும் அவர்களின் நாடும் : ————.
இலங்கையர்—பாரம்பரீய இலங்கையர்.
—பதிவுபெற்ற இலங்கைப் பிரஜை.

9. பாடசாலையில் பங்குபற்றிய விளையாட்டுக்கள் : ————.
(கால்ப்பந்து, மட்டைப்பந்து விளையாட்டுக்களும் சாரண இயக்கமும்)

10. உமது தற்போதைய உத்தியோகம், ஏதாவது இருந்தால் : ————.

11. நீர் வேலையிலிருந்தால், பயிற்சி வகுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்து, அவ்வகுப்பில் உரிய நேரத்தில் சேருவதற்காக, உம்மை விடுதலை செய்வதற்கு உமது தலைவர் (முதலாளி) விரும்புகிறாரா ? ————.

12. இதற்குமுன் எப்போதாவது இப்பயிற்சி வகுப்பில் இருந்திருக்கிறீரா ? ————.

அரசாங்க சேவையிலிருந்து திறமையீனங் காரணமாக இளைப்பாறவில்லையென்றும் பதவியிலிருந்து விலக்கப்படவில்லையென்றும், பாரதூரமான குற்றச்சாட்டின்பேரில் ஓர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படவில்லையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். பொய்யான உறுதிப்படுத்தல்களைக் கொடுப்பது, அரசாங்க சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவதற்கேதுவாகும் என்பதை நான் உணருகிறேன்.

————————
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

(பரீட்சார்த்தி இவ்விடத்தில் ரூபா 5 பெறுமதியான தபால் முத்திரையை ஒட்டி அதன் மீது கையொப்பமும் திகதியும் இடவேண்டும்).

நற்சான்றுப் பத்திரங்கள் கொடுத்தவர்களின் பெயர்கள் :

(1) ————. (3) ————.

(2) ————. (4) ————.

## கூட்டுறவுத் துறை

**கூட்டுறவுப் பல நோக்கச் சங்கங்களின் மனேஜராக அல்லது காரியதரிசியாக நியமனம்பெற விரும்புவோருக்குரிய பயிற்சி**

மேற்படி பயிற்சிபெற விரும்புவோர் 1959 ம் ஆண்டு மார்ச் மாதம் 25 ம் திகதிக்கு முன் " தலைவர், கூட்டுறவுக் கல்லூரி, பொல்கொல்லை " என்ற விலாசத்திற்குத் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பவேண்டும். விண்ணப்பப் பத்திரங்களைக் கூட்டுறவுக் கல்லூரித் தலைவரிடமிருந்து அல்லது விண்ணப்பம் செய்பவர் வசிக்கும் பகுதிக்குரிய உதவிக் கூட்டுறவு ஆணையாளரிட மிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**பயிற்சி விபரங்கள்**

**காலம் :** 9. 6. 59—9. 9. 59

**பாடங்கள் :** கூட்டுறவு, கணக்குப் பதிவும் கணக்கியலும், காரியதரிசி செயலாற்றும் முறை, விற்பனவு முறையும் நிருவாகமும்.

**பயிற்சி வகுப்பில் சேர்வதற்குரிய தராதரம் :**

விண்ணப்பம் செய்வோர்—

(1) 25. 3. 59 ல் 21 வயதுக்கு மேற்பட்டவராயும் 40 வயதுக்குட் பட்டவராயுமிருத்தல் வேண்டும்.

(2) சிங்கள அல்லது தமிழ் அல்லது ஆங்கில சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் பெற்றிருப்பதோடு கணிதம் அல்லது எண்கணிதம் அல்லது வர்த்தக கணிதம் உட்பட இரு பாடங் களில் மதிப்புச் சித்திபெற்றிருத்தல் வேண்டும் அல்லது 25.3.59 க்கு முன் குறைந்த பட்சம் ஒரு வருடமாகுதல் ஒரு கூட்டுறவு வாலிபர் சங்கத்தின் அங்கத்தவராயிருந்திருத் தல் வேண்டும் (ஆங்கில சிரேஷ்ட பாடசாலைத் தராதரம் பெற்றோர் கணிதம் அல்லது எண்கணிதம் அல்லது வர்த்தக கணிதத்திலும் சிங்களம் அல்லது தமிழிலும் மதிப்புச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்)

*அல்லது*

அடுத்து 3 ஆண்டுகளுக்கு ஒரு பதிவு பெற்ற கூட்டுறவுச் சங்கத்தில் மனேஜராகவோ, காரியதரிசியாகவோ, எண்ண லாளராகவோ கணக்குப் பதிவாளராகவோ கடமையாற்றி யிருத் தல் வேண்டும்.

*அல்லது*

கூட்டுறவுக் கல்லூரி 1950 ம் ஆண்டு தொடங்கி 1957 ம் ஆண்டு வரை நடத்திய கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பரீட்சையிற் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**பயிற்சி நிலையங்கள் :**

(1) **கூட்டுறவுக் கல்லூரி, பொல்கொல்லை.**—இலங்கையின் எப்பாகத்தி லுமுள்ளவர் இதிற் சேர விண்ணப்பம் செய்யலாம். வகுப்புக் கள் சிங்களத்தில் நடத்தப்படும்.

(2) **நீர்கொழும்பு, காலி, குருநாகல், இரத்தினபுரி, பண்டாரவளை, அனுராதபுரம், மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள கூட்டு றவுக் கல்வி நிலையங்கள் :** ஒவ்வொரு நிலையத்திலும் பயிற்சி பெறக்கூடியவரின் ஆகக் கூடிய தொகை 30; விண்ணப்பம் செய்வோர் நிலையங்கள் உள்ள மாகாணங்களில் வசிப்பவ ராய் அல்லது வேலை செய்பவராய் இருத்தல் வேண்டும்.

இவற்றில் தங்கும் வசதி கிடையாது. மட்டக்களப்பு நிலை யத்தில் தமிழிலும் ஏனைய நிலையங்களில் சிங்களத்திலும் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படும்.

இவற்றைவிட, யாழ்ப்பாணக் கூட்டுறவுக் கல்லூரியில், யாழ்ப் பாணக் கூட்டுறவு மேற்பார்வைச் சபையாலும், கொழும்பிலும், சிலாபத்திலும், கேகாலையிலும், மாத்தறையிலும், களுத்துறை யிலும் இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்தாலும் வகுப்புக் கள் நடத்தப்படும். இவ் வகுப்புக்களில் சேரவிரும்புவோர் பத்திரிகையில் அல்லது வேறு முறையில் அறிவித்தல் கொடுக்கப்படும் பிரகாரம் விண்ணப்பம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தெரிவு :** ஒவ்வொரு நிலையத்திற்கும் பயிற்சியாளரைத் தெரிந் தெடுப்பதற்கு எழுத்துப் பரீட்சை வைக்கப்படும். ஆகவே விண்ணப்பங் களைக் கவனமாக அனுப்ப வேண்டும். தகுதியுள்ளவர் மட்டும் விண்ணப்பம் செய்ய வேண்டியது அவசியம். விண்ணப்பங்களுடன் தெரிவுப் பரீட்சைக் கட்டணமாக ரூபா 2 போஸ்ரல் ஆடர் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பிரயாணச் செலவு கொடுக்கப்பட மாட்டாது. தகுதியின்றி விண்ணப்பம் செய்வோருக்குத் தெரிவுப் பரீட்சைக் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

**கட்டணம் :** பயிற்சி இலவசம். பயிற்சியின் முடிவில் நடைபெறும் பரீட்சையை எடுப்போரிடமிருந்து ரூபா 2.50 அறவிடப்படும்.

**உணவும் உறையுளும் :** கூட்டுறவுக் கல்லூரியில் தங்கும் வசதி பெறுவோர் உணவுக்கு மாதாந்தம் ரூபா 40 கட்டவேண்டும். கல்லூரி யில் தங்கும் வசதி பெறுதவர்களும், கூட்டுறவுக் கல்வி நிலையங்களில் பயிற்சி பெறுவோரும் உணவுக்கும் உறையுளுக்கும் தாமே ஒழுங்கு செய்துகொள்ள வேண்டும்.

**பரீட்சையும் தராதரப் பத்திரமும் :** பயிற்சியின் முடிவில் நடை பெறும் பரீட்சையில் தேறுபவர்களுக்குக் " கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் " வழங்கப்படும்.

**பயிற்சியின் பயன் :** " கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் " பெறும் யாவருக்கும் வேலை கிடைக்குமென்று கூட்டுறவுத்துறை உத்தர வாதமளிக்கவில்லை. ஆனால் கூட்டுறவுப் பல நோக்கச் சங்கங்களின் உப விதிகளின்படி மனேஜர்மாரையும், காரியதரிசிகளையும் நியமிப்பதற்குக் கூட்டுறவின் ஆக்க ஆணையாளரின் அனுமதி தேவை. " கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பரீட்சையில் " சித்தி பெற்றவரையே நியமிக்க வேண்டுமென்று ஆணையாளர் பொதுவாகக் கேட்டுக்கொள்வார்.

(ஒப்பம்) ஆர். ஜே. ஜீ. டி மெல்,
பதில் கூட்டுறவின் ஆக்கஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும்.

கூட்டுறவுத் துறை,
கொழும்பு.
1959 ம் ஆண்டு பெப்ரவரி மீ 17 ந் வ.

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசனப் பகுதி

குருநாகலிலுள்ள வடமேற் பகுதி நீர்ப்பாசன அதிபர், 4. 3. 59 புதன்கிழமை காலை 9.30 மணி வரையும், ரூபா 35,000 த்திற்கும் அதற்கு மேற்படவும், நீர்ப்பாசனப் பகுதியில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பின்வரும் வேலைகளுக்கு கேள்விப் பத்திரங் களை ஏற்பார் :—

(a) " நிடி பெண்டியெல என்னும் வாய்க்காலின் வெள்ளத்தடை கட்டை திருத்தி அமைத்தல் "

(b) நிக்கவரட்டியா—பாளபலன்ன றோட்டுக்கு தார் போடுவது.

2. கேள்விப் பத்திரங்கள் 2. 3. 59 திங்கட்கிழமை நண்பகல் 12 மணி வரையும், நிக்கவரட்டியாவில் உள்ள நீர்ப்பாசன இஞ்சினியரிட மிருந்து பெற்றுக் கொள்ளலாம். வேலையையொத்த ஏனைய விபரங் களையும் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். ரூபா 50.00 ஒரு கச்சேரியிலோ அல்லது நிக்கவரட்டியா நீர்ப்பாசனக் காரியாலயத்திலோ கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டு வருபவர்களுக்கே கேள்விப் பத்திரங்கள் கொடுக்கப்படும்.

எல். பி. எம். பர்நாந்து,
நீர்ப்பாசன இஞ்சினியர்,
நிக்கவரட்டியா பகுதி.

நிக்கவரட்டியா,
1959 ம் ஆண்டு மார்ச் மீ 6 ந் வ.

---

## நீர்ப்பாசன இலாகா

கீழே குறிக்கப்பட்டிருக்கும் அனுராதபுரம் புதுநறவுண பெரும் பகுதித் தலைமைக் காரியாலயக் கட்டிட வேலைகளுக்கு 1959 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 11ம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிவரை வடமத்திய பகுதி நீர்ப்பாசன அதிபர் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்வார்.

(அ) நீர்ப்பாசன அதிபர் காரியாலயம்;
(ஆ) கனிஷ்ட குமாஸ்தா இல்லம் 1
(இ) சிரேஷ்ட குமாஸ்தா இல்லம் 1
(ஈ) தொழிலாளர் இல்லம் 1

நீர்ப்பாசன இலாகாவில் (அ) 20,000 (ஆ) 15,000 (இ) 12,000 ஆகிய தொகைகளுக்கோ அல்லது மேலோ பதிவு செய்யப்பட்டவர் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.

மின்னதலை—மகாகணதராவ உபபகுதி நீர்ப்பாசன அதிபர் அவர்களிடம் இருந்து விண்ணப்பப்பத்திரங்களும் விபரங்களும் 1959ம் ஆண்டு பெப்ரவரி மாசம் 25ம் திகதி நண்பகல் 12 மணியிலிருந்து மார்ச்சு மாசம் 7ம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரம் பெற விரும்பும் விண்ணப்பக்காரர்கள் நீர்ப்பாசன அதிபர், மகாகணதராவ காரியாலயத்தில் அல்லது கச்சேரிகளில் ரூபா 25

முற்பணம் கட்டி றிசீற்று சமர்ப்பித்தால் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். தற்சமயம் வேலையை ஒப்புக்கொண்டிருக்கும் விண்ணப் பக்காரர்கள் தாங்கள் வேலே ஒப்புக்கொண்டிருக்கும் உத்தியோகத் தரிடமிருந்து தங்கள் திருப்திபற்றிய அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் திறக்கும் போது விண்ணப்பக்காரர்கள் சமுகந்தர அனுமதிக்கப்படுவார்கள்.

டி. வீ. எ. சேனரத்தின,
நீர்ப்பாசன அதிபர்,
மகா கணதராவ. உ.ப.

மிஹின்தலே,
1959 ம் ஆடு பெப்ரவரி மீ 18ந் உ.

---

## நீர்ப்பாசன இலாகா

கீழே குறிக்கப்பட்டிருக்கும் மகாகணந்தராவ கட்டிடவேலைகளுக்கு வ. ம. பி. பெரும்பகுதி நீர்ப்பாசன அதிபர் 1959 ம் ஆண்டு, மார்ச்சு மீ 11 ம் திகதி வரை கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளுவார்.

(அ) மேற்பார்வையாளர் இல்லம் 1 (நிரந்தர);

(ஆ) கனிஷ்ட உத்தியோகத்தர் இல்லம் 2 (தற்காலிக).

நீர்ப்பாசன இலாகாவில் 20,000 ரூபாவுக்கோ அல்லது மேலோ பதிவு செய்துள்ளவர்கள் இதற்குத் தகுதியுடையவர்களாவர்.

மிகிந்தலே—மகாகணந்தராவ உபபகுதி நீர்ப்பாசன அதிபர் அவர்களிட மிருந்து விண்ணப்பப் பத்திரங்களும் விபரங்களும் பெப்ரவரி 25 ம் திகதி தொடக்கம் மார்ச்சு மாதம் 7 ம் திகதி நண்பகல் வரை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரம் பெற விரும்பும் விண்ணப்பக்காரர்கள், நீர்ப்பாசன அதிபர் மகாகணந்தராவ காரியாலயத்தில் அல்லது கச்சேரிகளில் 25 ரூபா முற்பணம் கட்டி றிசீற்று சமர்ப்பித்தால் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். தற்சமயம் வேலையை ஒப்புக்கொண்டிருக்கும் விண்ணப்பக்காரர்கள் தாங்கள் வேலே ஒப்புக் கொண்டிருக்கும் உத் தியோகத்தரிட மிருந்து தங்கள் திருப்திகரம் பற்றிய அத்தாட் சிப் பத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் திறக்கும்போது விண்ணப்பக்காரர்கள் சமுகந்தர அனுமதிக்கப் படுவார்கள்.

நீர்ப்பாசன அதிபர்,
மகாகணதராவ-உ.ப.

மிகுந்தலே,
1959 ம் ஆடு பெப்ரவரி மீ 18ந் உ.

---

## வன பகுதி

1959 ம் ஆண்டின் கண்டர் பட்டை, ஆவரம் பட்டை எடுக்கும் உரிமைக் கேள்விப் பத்திரங்கள் வனபாதுகாவல் அதிபரால், கொழும்பு, தபால் பெட்டி இல. 509 விலாசத்தில், 1959 ம் ஆண்டு மார்ச்சு 10 ம் திகதி, காலை 9.30 மணி வரையில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் அன்று காலை 10 மணிக்குத் திறக்கப்படும்.

மறு விபரங்களும், கேள்விப்புத்திரங்களும் இந்தக் கந்தோரிலும், 267, வொக்ஷோல் வீதியில் உள்ள கிளைக்காரியாலயத்திலும் மற்றும் திரிகோணமலை, மட்டக்களப்பு, நுவரேலியா, காலி, குருநாக்கல், யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலுள்ள பகுதி வன உத்தியோகத்த ரிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரம் பெறுவதற்கு வனபாதுகாவல் அதிபரின் காரியாலயத்தில் அல்லது ஒரு கச்சேரியில் பிணைப்பணம் ரூபா 20 கட்டிப் பற்றுச்சீட்டு அணைத்தல் வேண்டும்.

## கடற்றொழிற் பகுதி

### மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தாங்குடியில் 24 கடற்றொழிலாளர் வீடுகளை நிர்மாணித்தல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தாங்குடியில் 24 கடற்றொழிலாளர் வீடுகளை நிர்மாணிப்பதற்காய கேள்விகள், செனற் சதுக்கம், கொழும்பு 1 இலுள்ள கைத்தொழில் கடற்றொழில் அமைச்சுவின் கேள்விச் சபைத் தலைவரவர்களால் 1959 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 25 ந் திகதி, புதன் கிழமை, நண்பகல் 12 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ஒவ்வொன்றும் 6 வீடுகளைக் கொண்ட கூறுகளுக்காய கேள்விகள் காலிமுகம், கொழும்பு 3 இலுள்ள கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெறக்கூடிய பத்திரங்களில் இரட்டைப் பிரதியில் அனுப்பப்படல் வேண் டும். கேள்விப் பத்திரங்கள் அரசாங்கத்துடன் கட்டிட வேலைகளுக்காக ரூபா 15,000 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்தோருக்கு மாத்திரம் 1959 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 23 ந் திகதி, பிற்பகல் 3 மணி வரையும் வழங்கப்படும்.

3. காலிமுகம், கொழும்பு 3 இலுள்ள கடற்றொழிற் பகுதித் தலைமைக் காரியாலயத்திலாவது அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள எந்தக் கச்சேரியிலாவது கூறு ஒவ்வொன்றுக்கும் ரூபா 25 ஐ வைப்புப் பணமாகக் கட்டி, கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் பொழுது இத் தொகைக்காய பற்றுச் சீட்டைக் காண்பிக்க வேண்டும்.

4. ஏனைய விபரங்களை கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டி. ரீ. ஈ. ஏ. டீ. பொன்சேக்கா,
கடற்றொழில் அதிபர்.

கடற்றொழிற் பகுதி,
கொழும்பு 3;
1959 ம் ஆடு பெப்ருவரி மீ 20 ந் உ.

---

## கடற்றொழிற் பகுதி

### மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தாங்குடியில் கடற்றொழிலாளர் வீடமைப்புப் பிராந்தியத்தில் மூன்று கிணறுகளை நிர்மாணித்தல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தாங்குடியில் கடற்றொழிலாளர் வீட மைப்புப் பிராந்தியத்தில் மூன்று கிணறுகளை நிர்மாணிப்பதற்காய கேள்வி கள், செனற் சதுக்கம், கொழும்பு 1 இலுள்ள கைத்தொழில் கடற் றொழில் அமைச்சுவின் கேள்விச் சபைத் தலைவரவர்களால் 1959 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 25 ந் திகதி, புதன்கிழமை, நண்பகல் 12 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விகள், காலிமுகம், கொழும்பு 3 இலுள்ள கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெறக்கூடிய பத்திரங்களில் இரட்டைப் பிரதியில் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள், அரசாங்கத்துடன் கட்டிட வேலைகளுக்காக ரூபா 15,000 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்தோருக்கு மாத்திரம் 1959 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 23 ந் திகதி பிற்பகல் 3 மணி வரையும் வழங்கப்படும்.

3. காலிமுகம், கொழும்பு 3 இலுள்ள கடற்றொழிற் பகுதித் தலைமைக் காரியாலயத்திலாவது அல்லது கொழும்புக்கு வெளியே யுள்ள எந்தக் கச்சேரியிலாவது ரூபா 25.00 ஐ வைப்புப் பணமாகக் கட்டி, கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் பொழுது இத் தொகைக்காய பற்றுச்சீட்டைக் காண்பிக்க வேண்டும்.

4. ஏனைய விபரங்களைக் கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டி. ரீ. ஈ. ஏ. டீ. பொன்சேக்கா,
கடற்றொழில் அதிபர்.

கடற்றொழில் பகுதி,
கொழும்பு 3,
1959 ம் ஆடு பெப்ரவரி மீ 20 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது